செ.வெ.எண் : 175 நாள் : 20.3.2009

**பத்திரிகைச் செய்தி**

கடந்த 19–02–2009 அன்று சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற சட்டம் ஒழுங்கு நிகழ்வின்போது, காவல்துறையினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் அத்துமீறல்கள் நடந்துள்ளதா என்பது குறித்து, உரிய விசாரணை மேற்கொண்டு, அது தொடர்பான அறிக்கையினை அரசுக்கு அளித்திடும் பொருட்டு, முதன்மை செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் முனைவர் ந. சுந்தரதேவன், இ.ஆ.ப., அவர்களை ஒரு நபர் குழுவாக நியமித்து தமிழக அரசு அண்மையில் ஆணை பிறப்பித்துள்ளது.

முதன்மை செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் தலைமையிலான குழுவின் முதற்கட்ட விசாரணை வரும் மார்ச்த் திங்கள் 24 மற்றும் 26 ஆகிய நாட்களில் பின்வரும் முகவரியில் உள்ள அலுவலகத்தில் மாலை 3–00 மணி முதல் நடைபெறவுள்ளது.

கடந்த 19–02–09 அன்று நடந்த நிகழ்வுகளை நேரடியாகக் கண்டோர் தங்களின் புகைப்படங்கள், வீடியோ ஆதாரங்கள் உள்ளிட்ட சாட்சியங்களை மேற்கண்ட குழுவின் முன்பு நேரில் வந்து அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், இவ்விசாரணை குழு தொடர்பான விவரங்களை 044 – 28523299 என்கிற தொலைபேசி எண்ணில் அறிந்து கொள்ளளலாம்.

முகவரி :

| | |
|---|---|
| சுனாமி திட்ட மேலாண்மை அலகு கூட்ட அரங்கு,<br>ஐந்தாவது தளம்,<br>எழிலகம் இணைப்பு,<br>சேப்பாக்கம், சென்னை – 600 005. | Tsunami Project Management Unit Conference Hall,<br>Fifth Floor,<br>Ezhilagam Annexe,<br>Chepauk, Chennai-600 005. |

சுந்தரதேவன்
19.3.2009

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9